# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு உ௰௪ | மலர் |
|---|---|---|
| சஎ | பிரமாதீச, ஆடி<br>( 1973 — ஜூலை — ஆகஸ்ட் ) | ச |


## வாக்கிய அமைப்பு


டாக்டர் கி. அரங்கன்,

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம். மைசூர்.


கடந்த பதினைந்து ஆண்டுகளாக மொழியியலில் தொடரியல் [ Syntax ] ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிறது. ஒலிகளின் அமைப்பு முறையினையும் சொற்களில் பகுதிகளும் விகுதிகளும் அமைந்து கிடக்கின்ற. முறையினையும் மட்டுமே ஆராய்ந்து கொண்டிருந்த மொழியியலாளர்கள் ஒரு மொழியின் தன்மையை அறிய வாக்கியங்களின் அமைப்பு முறையினையும் விரிவாக ஆராய வேண்டும் என்ற நிலைக்கு ஆளாகி யிருக்கிறார்கள். சோம்சுகியின் [ Chomsky ] 'தொடரியல் அமைப்புகள்' என்ற சிறிய நூல் மொழியியலில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கிவிட்டது.[1]

'தொடரியல் அமைப்புகள்' என்ற நூலில் கூறப்பட்ட கொள்கைகள் பலவற்றை சோம்சுகி தன்னுடைய 'தொடரியல் கொள்கைகளின் கூறுகள்' ( Aspects of the theory of syntax ) என்ற நூலில் மாற்றிவிட்டார். சோம்சுகிக்கு முன்னர் ஆக்கெட் [Hockett] கிளீசன் [Gleason]. ஆரிசு [ Harris ], வெல்சு [Wells] போன்றோர் அண்மைப் பகுப்பு [Immediate constituent analysis]

1 சோம்சுகியின் 'தொடரியல் அமைப்புகள்' என்ற நூலில் கூறப்பட்டுள்ள மாற்றிலக்கணத்தை அறிந்து கொள்ள அரங்கனின் (1970) 'மாற்றிலக்கணம் ஓர் அறிமுகம்' என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

முறையை மேற்கொண்டு வாக்கியத்தின் அமைப்பை ஆராய்ந்தார்கள். இவர்கள் வாக்கியம் என்பதை ஒலிகளின் தொடர்ச் சங்கிலி என்று கருதினார்கள்.

1 இராமன் கடைக்குப் போனான்

என்ற வாக்கியத்தில் இராமன் என்பதை தனியாகவும் கடைக்குப் போனான் என்பதை தனியாகவும் பிரிப்பார்கள் கடைக்குப்போனான் என்பதை மேலும் கடைக்கு என்றும் போனான் என்றும் பிரிப்பார்கள். இதை




என்று விளக்கலாம், இதைப் பின்வரும் கிளைப்படத்தின் மூலமும் விளக்கலாம்.




இம் முறையைக்கொண்டு மொழியில உள்ள எல்லா வாக்கியங்களின் அமைப்பையும் விளக்க முடியவில்லை மேலும் இம் முறை வாக்கியங்களுக்கு இடையே உள்ள தொடர்பையும் [ Relation ] காட்ட தவறிவிடுகிறது.

2. திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்

என்ற வாக்கியமும்

3. திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பட்டது என்ற வாக்கியமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. இத்தொடர்பை தமிழறிந்த எல்லோராலும் உணர முடியும். இவ் வாக்கியங்களை அண்மைப் பகுப்பு முறையை மேற்கொண்டு விளக்க முற்பட்டால் இரண்டு வாக்கியங்களுக்கும் இரண்டு விதமான அமைப்பு விளக்கம் Structural description கிடைக்கும்.







**இராமன் கடைக்குப் போனான்** என்ற வாக்கியத்தை எப்படி விளக்கினோமோ அப்படியேதான் **திருக்குறள் திருவள்ளுவரால்** எழுதப்பட்டது என்ற வாக்கியத்தையும் விளக்குகிறோம். வாக்கியங்கள் (1)க்கும் (2)க்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை ஆனால் வாக்கியங்கள் (2)க்கும் (3)க்கும் ஒருவிதத் தொடர்பு இருக்கிறது. இத்தொடர்பைக் காட்டுவதில் தான் அண்மைப் பகுப்பு முறை தவறிவிடுகிறது.

மொழியில் உள்ள வாக்கியங்களின் தொடர்பை எப்படித் தொடரியலில் காட்டுவது என்பது மொழியியலாளர்களுக்கு ஒரு பெரும் பிரச்சனையாக ஆகிவிட்டது. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வாக்கியங்கள் ஒன்றோடொன்று தொடர்புள்ளவையாக இருந்தால் அவற்றை அடிப்படை வாக்கியம் ஒன்றிலிருந்து வருவிக்க வேண்டும். வாக்கியங்கள் (2)ம் (3)ம் ஒன்றோடொன்று தொடர்புள்ளவை என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகையால் வாக்கியம் (2)யை (3)லிருந்தோ வாக்கியம் (3)யை (2)லிருந்தோ வருவிக்க வேண்டும். இதை

திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்
திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பட்டது

என்றும்

திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பட்டது
திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்

என்றும் காட்டலாம். தொடர்புடைய வாக்கியங்களுக்கு அடிப்படை வாக்கியம் ஒன்று உண்டு என்பதை வலியுறுத்தியாக வேண்டும். இதை சோம்சுகி தன்னுடைய 'தொடரியல் அமைப்புகள்' என்ற நூலில் வலியுறுத்திக் காட்டினர். இவ்வாறு அடிப்படை வாக்கியத்திலிருந்து மற்றைய வாக்கியங்களை தொடர்புபடுத்திக் காட்டப் பயன் படுத்தும் விதிகள் தான் மாற்று விதிகள் [ Transformational Rules ]

வாக்கியங்களின் அமைப்பை விளக்கிக் காட்ட நாம் மூன்று விதமான விதிகளைப் பயன்படுத்தியாக வேண்டும் தொடரமைப்பு விதிகள் [ Phrase structure rules ] அடிப்படை வாக்கியத்தைத் தோற்றுவிக்கும்; மாற்று விதிகள் இவ்வடிப்படை வாக்கியத்திலிருந்து மற்றைப தொடர்புடைய வாக்கியங்களை வருவிக்கும். உருபொலியின் விதிகள் [ Morphophonemic rules ] வாக்கியத்தில் உள்ள ஒலி மாற்றங்களை விளக்கும் இங்கு நாம் உருபொலியின் விதிகளின் தன்மையைப் பற்றி ஒன்றும் கூறப்போவதில்லை.

வாக்கியம் (2) விருந்து வாக்கியம் (3) மட்டும் அல்லாமல் வாக்கியங்கள் (4) யும் (5)யும் மாற்று விதிகளின் மூலம் வருவிக்கலாம்

(2) திருவள்ளுவர் திருக்குறளை எழுதினர்

(4) திருவள்ளுவர் திருக்குறளை எழுதினரா?

(2) திருவள்ளுவர் திருக்குறளை எழுதினர்

(5) திருவள்ளுவர் திருக்குறளை எழுதவில்லை

மாற்றுவிதிகள் அடிப்படை வாக்கியத்திலிருந்து வினவாக்கியத்தையும் எதிர்மறை வாக்கியத்தையும் வரவழைத்தன. ஆகையால் சோம்சுகியின் மாற்றிலக்கணம் [ Transformational Grammar ] அண்மைப் பகுப்பு முறை இலக்கணத்தைவிட ஆற்றல் வாய்ந்தது. மாற்றிலக்கணத்தால் மொழியின் வாக்கியங்களுக்கு இடையே உள்ள தொடர்பை விளக்கிக் காட்ட முடிகிறது.

'தொடரியல் அமைப்புகள்' என்ற நூலில் சோம்சுகி விளக்கிய மாற்றிலக்கணம் பல வகைகளில் குறைபாடு உடையது இந்த மாற்றிலக்கணம் வாக்கியத்தின் புற அமைப்பை [ Surface structure ] மட்டுந்தான் விவரிக்கிறது.

அண்மைப் பகுப்பு முறை இலக்கணத்தைவிட மாற்றிலக்கணம் ஆற்றல் வாய்ந்ததாக இருப்பினும் வாக்கியத்தின் புற அமைபையே இவை இரண்டும் விளக்குகின்றன 1957லிருந்து 1964 வரை நடந்த ஆராய்ச்சிகள் பல்வேறு மாற்றங்களை மாற்றிலக்கணத்தில் புகுத்த வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்தின. இம்மாறுதல்களை உள்ளடக்கி 1965ல் சோம்சுகி 'தொடரியல் கொள்கைகளின் கூறுகள்' என்ற நூலை வெளியிட்டார். இந்நூலில் விளக்கிய மாற்றிலக்கணத்தின் அமைப்பைக்கூறும் முன் இந்த மாற்றத்திற்குரிய காரணங்களை முதலில் ஆராய்வோம்.

வாக்கியத்தை விளக்க முற்படுகின்ற இலக்கணங்கள் வாக்கியத்திற்கு அக அமைப்பு [ Deep Structure ] என்ற ஒரு நிலையும் புற அமைப்பு [ Surface structure ] என்ற ஒரு நிலையும் [ Level ] உண்டு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழில்

(6) இங்கே வா

(7) அங்கே உட்காருங்கள்,

என்ற வாக்கியங்களை நாம் அடிக்கடி பயன் படுத்துகிறோம் மரபுவழி இலக்கணத்தார்கள் [ Traditional Grammarians ] இவ்வாக்கியங்களில் **நீ** என்பதும் **நீங்கள்** என்பதும் தோன்றா **எழுவாய்** என்பார்கள். **நீ** என்ற எழுவாயும் **நீங்கள்** என்ற எழுவாயும் வாக்கியங்கள் (6) லும் (7) லும் காணப்படவில்லை. இருப்பினும் இவ்வாக்கியங்களைக் கேட்கின்ற தமிழறிந்த எல்லோரும் இவ்விரண்டு சொற்களையும் சேர்த்து பொருள் [ Meaning ] உணர்கிறார்கள். மொழியைப்பேசுகின்ற மக்கள் சில சொற்கள் வாக்கியங்களில் காணப்படாவிட்டாலும் அவற்றையும் உள்ளடங்கிய வாக்கியங்களை புரிந்து கொள்கிறார்கள் ஆகையால் நாம் ஒரு வாக்கியத்தை புரிந்துக்கொள்ள அந்த வாக்கியத்தின் பொருளை உணர வாக்கியத்தில் காணப்படாத சிலசொற்களையும் சேர்த்துக்கொள்கிறோம், இதிலிருந்து நாம் ஒன்றை உணரவேண்டியது அவசியம். நாம் மொழியைப் பேசும் பொழுது வாக்கியத்தை முழுமையாக முடிப்பதில்லை, வாக்கியத்தின் முழுப்பொருளையும் தரக்கூடிய சொற்கள் அனைத்தையும் பயன்படுத்துவதும் இல்லை ஆனால் இவ்வாக்கியங்களைக் கேட்கின்றவர்கள் பேசுபவர் [ Speaker ] என்ன நினைக்கிறாரோ அதை உணர முடிகின்றது. பேசுபவர் **நீ இங்கே வா** என்று நினைத்து

இங்கே வா என்று மட்டும் கூறுகிறார். கேட்பவர் [ Hearer ] இங்கே வா என்பதை மட்டும் கேட்டு நீ இங்கேவா என்று அவர் கூறுகிறார். என்பதை இவர் புரிந்து கொள்கிறார். இதை




காட்டாலம்.

பொருளை [Semantics] அடிப்படையாக வைத்துப் பார்க்கும் பொழுது வாக்கியங்கள் (6) லும் (7) லும் நீ என்ற எழுவாயும் நீங்கள் என்ற எழுவாயும் புற அமைப்பில் இல்லாமல் அக அமைப்பில் [Deep Structure] இருக்கின்றன. [2] ஒரு வாக்கியத்தின் முழுப் பொருளையும் உணரக்கூடிய சொற்களும் மற்றைய விகுதிகளும் அக அமைப்பில் இருக்கவேண்டும். பொருளியல் பகுதியின் [ Semantic Component ] விதிகள் அக அமைப்பை அடிப்படையாகக்கொண்டு அவ்வாக்கியத்தின் பொருளைக் கொடுக்கும்.

நாம் முன்பே கூறியபடி மாற்றிலக்கணம் வாக்கியங்களுக்கு இடையே உள்ள தொடர்பை விளக்கவேண்டும். ஆகையால் மாற்றிலக்கணத்தின் தொடரமைப்பு விதிகள் வாக்கியத்தின் அக அமைப்பை உருவாக்கும் வாக்கியங்கள் (6) க்கும் 7க்கும் அவற்றின் அக அமைப்பான

(8) நீ இங்கே வா

(9) நீங்கள் அங்கே உட்காருங்கள்

என்பதைத் தொடரமைப்பு விதிகள் தோற்றுவிக்கும். மாற்று விதிகள் நீ என்பதையும் நீங்கள் என்பதையும் விலக்கி புற அமைப்பு வாக்கியங்களான இங்கே வா என்பதையும் அங்கே உட்காருங்கள்

2 இதை நிலைநாட்ட தொடரியல் ஆதாரங்களும் [Syntactic evidence] கொடுக்கப்பட வேண்டும், See Rangan 1972 for syntactic evidences

என்பதையும் வருவிக்கும். இரண்டோ இரண்டுக்கு மேற்பட்ட வாக்கியங்களோ ஒன்றோடொன்று தொடர்புள்ளவையாக இருந்தால் அவைகளுக்கு ஒரே அக அமைப்பு இருக்கும். இந்தப் பொதுவான அக அமைப்பிலிருந்து தொடர்புடைய வாக்கியங்கள் மாற்றுவிதிகள் செயல்படும்பொழுது உருவாகும். ஆகையால் மொழியில் உள்ள வாக்கியங்களின் அமைப்பை நாம் விளக்க முற்படும்பொழுது அக அமைப்பு என்ற நுண்மையான நிலையையும் [Abstract Level] புற அமைப்பு என்ற நிலையையும் பயன்படுத்தியாக வேண்டும். சுருங்கக்கூறினால் வாக்கியத்திற்கு இரண்டு நிலைகள் உண்டு (1) அக அமைப்பு (2) புற அமைப்பு ஒரு வாக்கியத்தின் பொருளை உணருவதற்கு வேண்டிய எல்லா சொற்களையும் அக அமைப்பு கொண்டிருக்கும். புற அமைப்பில் சில சொற்களும் தொடர்களும் மறைந்து நின்று பொருளுணர்த்தும். இதைப் பின்வரும் படம் விளக்கும்




வாக்கிய அமைப்பு


### மேற்கோள்

**தமிழ்**

அரங்கன், கி மாற்றிலக்கணம்—ஓர் அறிமுகம் செந்தமிழ், ஜூன் 1970. பக்கம் 1—9

**ஆங்கிலம்**

Chomsky, N. 'Syntactic Structures' Mouton Co: The Hague (1957)
'Aspects of the theory of Syntax' MIT Press Cambridge (1965)

Rangan, K. 'Imperatives in Tamil' in Proceedings of the First Conference of tae First conference of Dravidian Linguists Trivandram (1972) pp. 180—89

# திருக்குறட் கருவூலம்

## ( வேண்டுதல் வேண்டாமையிலான் )

வித்துவான் பி. மா. சோமசுந்தர முதலியார், இராணிப்பேட்டை.

பிற உயிர்களான் எய்தும் துன்புகளில் அரசரால் களையப் படுவன ஐந்தாம் அவற்றை.

" மா நிலங்கா வலனுவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றான் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறந்தாற் கள்வரா னுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்கப்பா னல்லனோ "

என வரூஉம் அருண் மொழித் தேவ நாயனார் அருளிச் செயலால் அறிக. பனி, மழை, வேனில் சூறுவளி, மின், இடி யேறு முதலாய இயற்கைச் செய்திகளாலுறும இடும்பைகளையும் அடக்கியுரைத்தார் உரையாசிரியர் என்றுணர்க.

இனி, கல்வியான் விளையுங் கலக்கமும் உண்டு இக்கலக் கத்துள் தலையாயது நூல்களைப் பதிப்பித்திடுவாரால் படர்வ தாகும். என்னை? நூல் ஓதற்கு எளிதாயிருத்தல் வேண்டும். என்ற அசட்டெண்ணத்தால் சொற்சிதைவும், புணர்ச்சிபழிவும் செய்து நூலைப் பதிப்பிக்கின்றாராகலான். வணிக நோக்கோடு நூல் வெளியிடுவார் பதிப்பில் எழுத்துப் பிழைகள் இருக்கலாம் புணர்ச்சிப் பிரிவும் சொற் சிதையும பெரும்பாலும் இரா. சமய நோக்குடனும் மொழி நோக்குடனும் வெளியிடுவோரே புணர்ச் சியைப் பிரித்தும், சொல்லைச் சிதைத்தும் வெளியிட்டுத் தமிழ்க் கொலை செய்வாராயினர்,

மாந்தர் புணர்ச்சியான் இன்பமும் பிரிவான் துன்பமும் எய்துவர் அன்றோ? அஃதுணர்ந்தார் சொற்களுக்கும் அத்தன் மையுண்டெனல் அறியாமை என்கொலோ? பிரிந்த சொற்கள் இலக்கண அமைதியை இழப்பதோடு ஓசை நயத்தையும் இழக் குமே. பிறர் புணர்ச்சியைக்கெடுத்த பாண்டு மன்னன் தன் இரு மனைவியரும் மக்கட்பேறு எய்தற்குப் பிறர் துணையையன்றோ நாடிநவை யுற்றான்?

1968ஆம் ஆண்டு சைவ சித்தாந்த மகாசமாச வாயிலாகத் திருவாசகப் பதிப்பொன்று வெளிவந்துள்ளது. இப்பதிப்பு

மிகச் சீரியதென்று தனக்குத்தானே புகழ்மாலை வேய்ந்து கொண்டது. இதன்கண் மேலே யாம் உரைத்த குற்றம் பொதிந்து பொலிவுறுகின்றது. சொற்பிரிவிலும் ஒருவரைம் யறையின்று. சான்றாகக் " கொள்ளுங் கில்லெலை" எனு பாடலின் மூன்றாவது அடி

நள்ளும் கீழ்உளும் மேலுளும் யாவுளும்

என்றுளது. இதன்கண் கீழ் + உளும் எனப் பிரித்தற்கு இன்றியமையாமையும், மேல் உளும் யாஉளும் என்று பிரியாமைக்கு இன்றியமையாமையும் ஈன்னே என்பது. அன்றியும் 'முத்தன்ன வெண்ணகையாய்' என்ற பாடலின் ஈற்றடி எமக் கேலோர் எம்பாவாய்' என இருக்க, இது தொடங்கி 16 பாடல்கள் கழிந்து வரும் 'உங்கையிற் பிள்ளை ' எனும் பாடலின் ஈற்றடி எமக்கு ஏலோர் எம்பாவாய்" எனச்சொற்பிரிவு செய்தற்கு அப்பாடல் செய்த பாவந்தான் என்னையோ? இன்னனபல்ல: இவை சுட்டப்படுதற்கு காரணம் சொற்பிரிவா லெய்தும் சோர்வைச் சுட்டற்கேயாம். மற்றெக்காரணமும் இன்று.

இன்னணம் சொற்பிரிவு செய்தலால் இலக்கிய நயமும் இறந்து படுகின்றது. சான்று ஒன்று காட்டுவல்.

"விரையலங்கற் பல்லவனு மதுகேட்டு வெகுண்டெழுந்து
புரையுடைய மனத்தினராய்ப் போவதற்குப்
பொய்ப்பிணி கொண்
டுரைசிறந்த சமயத்தை யழித்தொழியப் பெறுவதே
கரையிறவத் தீரிதனுக் கென்செய்வ தெனக்கனன்றான் "

(பெரியபுராணம்-திருநாவுக்கரசு நாயனர் புராணம்-
பாடல் 88)

நாவரசர் பெருமான் சமணம் நீங்கிச் சைவம் சேர்ந்தார் என்று சமண முனிவர்கள் உரைப்பக் கேட்ட பல்லவமன்னன் கூற்றாய் வருவது இத் திருப்பாடல். மன்னர்க்குச் சமணமுனிவர்கள் குரவர்களாந் தகுதியுடையார்கள். ஆகலின் அவன் அவர்களைக் "கரையில் தவத்தீர்" (கரையிறவத்தீர்) எனவிளித்தல் சால்பிற்றேயாம் இப்பாடல் அருளியவரோ சேக்கிழார் பெருமான். " புண்டலைவன் முருட்டமணர், " " இருட் குழாம், " ": கொலைபுரியா நிலைகொண்டு பொய்யொழுகுமமண்குண்டர்" என இன்னோரன்ன திருமொழிகளால் அச்சமணர்களைக் கீழ்ப்படுத்து உரைப்பவர் தம் அரசனைநோக்கிச் " சமணர் பொய்ந்

நூல்" என்று சீவக சிந்தாமணியைச் செப்பியவர் அவர்தம் திருவாயால் அதே சமணரைக் "கரையில் தவத்தீர்" என்று கூறலாமா? அன்றி அவர்தாம் கூறுவாரா? மொழிவது பல்லவ மன்னவன் ஆயினும் மொழியவைப்பது தொண்டா சீர்பரவு வாரேயாகலின், அங்ஙனம் கூறலால் அவரும் அக்கருத்தை மறைமுகமாக உடன்பட்டாரே யாதல் வேண்டும். உடன் பட்டிலராயின் தங்கருத்தை அச் சொற்களிலேயே பொதிந்து வைத்திருத்தல் வேண்டும். கறயிறவைத்தீர் ' என்ற சொற்களை ஆராயின் அவ்வுண்மை வெளியாம் இந்நெறிகொண்டு நோக்குவாம்.

அரசன் உரையாக்குங்கால் 'கரையிறவத்தீர். என்பதனைக் கரை + இல் + தவத்தீர் என்று பிரிவு செய்து பொருள் உரைக்க சேக்கிழார் திருவுள்ளம் ஆக்குங்கால் அதனைக் கரை + இறு + அவத்தீர் எனப்பிரிவு செய்து பொருள் உரைக்க. இதன்கண் உள்ள நயமுணருங்கால் உண்டாம் இன்பம் எத்துணைப் பெருமைத்து உன்னுமின்.

1970ஆம் ஆண்டு திருப்பனந்தாள் மடம் வெளியிட்ட நூலில் சொற்பிரிவு செய்யப்பட்டுக் கரையில் தவத்தீர் என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது. இச்செயலால் நாம் இழக்கும் இலக்கிய இன்பம் எத்துணைப் பேரளவைத்து. உன்னிப்பார்மின்!

இதுகாறும் வெளியாய பெரிய புராண உரைகளுள், எதுவும் இந்நயத்தை உணர்த்தாதே சென்றமையின் அச் சொற்களுக்கு வேறுபொருள் இன்றெனக்கருதி இன்னணம் சொற்பிரிவு செய்து நூல் பதிப்பிக்கப்பட்டதுபோலும்.

இனி தெய்வத்தைப் பற்றி வருவனவற்றைக் காண்போம். தெய்வம் ஈண்டு ஊழின் மேற்று ' தெய்வத்தா லாகா தெனினும்" என்று தெய்வப்பாவலர் தெரித்தமையுந் தேர்க இதனுலெய்தும் இன்னல்களாவன கருக்குழி யழுங்கல். பிறவியுறல், வளர்தல், நரைதிரையுறல். அறியாமையில் பிணிபடல், இறப்புறல், அளற்றினழுங்கல் எனும இன்னோரன்ன.

கருக்குழி யழுங்கலையும், பிறவியானெய்து துன்பையும்

" அன்னைதன் வயிற்றிடை யனேக துன்பமே
பின்னையும் பிறப்புழி பெரிது துன்பமே

தன்னைய ரறவுரை தரிக்கத் தாதையோர்
சொன்னவிற் குரவனுஞ் சுளியத் துன்பமே''

என்றுரைக்கும் சிவதருமோத்தரம்

''மானிடப் பிறப்பினுண் மாதா வுதரத்
தீனமிற் கிருமிச் செருவினிற் பிழைத்து
மொருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்து
மிருமதி விளவி னெருமையிற் பிழைத்து
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்து
மீரிரு திங்களிற் பேரிருட் பிழைத்து
மஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்து
மாறு திங்கள் ளூறலர் பிழைத்து
மேழு திங்களிற் றாழ்புவி பிழைத்துந்
மெட்டுத்திங்களிற் கட்டமும் பிழைத்து
மொன்பதில் வருதரு துன்பமும் பிழைத்து
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்''

என்று அன்னைதன் வயிற்றிடை வரும் அனேக துன்புகளைத் திருவாசகம் விரித்துணர்த்தல் காண்க.

கருப்பை யுறுத்தலானும், அதில் நீர் நிறைதலானும், வயிற்றுத்தீயின் வெப்பத்தானும். காற்று முரித்துத் தள்ளுதலானும், அல்குற் புழை நெருக்கத்தானும். மலையிருத்திக் கொண்டது போலவும், கடலின கண் வீழ்த்தி மிதித்தல் போலவும், இருப்புப்பானையில் அடைத்து நெருப்பிட்டுச் சுடுதல் போலவும், மலைமேல் நின்றூனைத் தலைகீழாகத் தள்ளுதல் போலவும், ஆலையிட்ட கரும்பு நெருக்குண்டல் போலவும் பிறவிக்காலத்து உயிர்கள் துன்புறும் என்க.

மக்கட்குறு துன்புகள் யாவினும் இறப்ப அச்ச மூட்டுவது இறப்பு ஒன்றேயாம் அவவச்சத்தின் பெருமை கணித்தே'' யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்'' என்றருள் வாராயினர் வாதவூரடிகள், அன்றியும் ''சங்கொத்த மேனிச் செல்வா சாதனுறையே னுன்னை யெங்குற்று யென்ற போதாவிங் குற்றேனென் கண்டாயே', எனவரூடம் ஆளுடைய அரசர் அருண்மொழியும் ''இறப்பொடு பிறப்பை யெண்ணினு னெஞ்சது பகீரெனத் துயிலுறு திருவிழியு மிரவு பகலாய்'' எனவரூஉம் தாயுமானவ அடிகளாரின் திருமொழியும் சிந்திக்கற்பால.

௩. இடும்பையானுறு பயன்

உயிர்கள் உய்தி பெறவன்றே உடம்பொடு புணர்க்கப் பட்டன. அவை துயருறும்படித் துன்பு பெறுதல் என்னையோ வெனில் உரைத்தும். அறியாமையான் பற்றப்பட்ட உயிர்கள் அதினின்றும் வீடு பெற்று அறிவு பெற்று இன்புநுகர்க என் பதே உலகியற்றியான் திருவுள்ளம். அறிவு பெறுதற்குளவாம் பல ஆறுகளில் இடும்பையும் ஒன்றும்,

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து ஆதலின் குரவனின்றியும் ஒருவன் தானே பொருள்களை ஆய்ந்து தெளிவுறலும் உண்டு. அதனால் அறியாமை அகலும். அறிவு மணற்கேணி யொத்து ஊறும்.

அஃதொப்பவே. ஊழான். உயிர்களான், இயற்கையான் உண்டாகும் துன்பங்களைக் கண்டும், கேட்டும், நுகர்ந்தும் உயிர்கள் அறியாமையின் நீங்கி அறிவு ஆக்கம்பெறும்

கல்வியானும். குரவனானும் வினையியற்றலானும் அவ்வறிவு மேலும் விரிந்து படர அறியாமை குறுகி நுணுகும ஆன்றோர் அருண்மொழிகள் அவ்வறிவை மேலும் விளககம் செய்யும். எனவே இடும்பைகளும் அறிவு ஊறுமாறு உதவற்கே தோன் றுவ எண்க.

உலகின் நீர்மை ஆய்ந்து தெளிந்தார். அறியாமையினின்று பெரிதும் நீங்கியாராகலின் இடும்பை சேர்ந்து அறிவுறல் வேண்டும் இன்றியமையாமை அவர்க்கு இல்லை. மடவோர்க்கே அஃதின்றியமையாது

"அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது"

என்னும் திருக்குறளையும் ஈண்டு நினைவு கூர்க.

பொருளை ஈட்டியுங் காவல் செய்தும் எய்திய துன்பம் நோக்கிப் பொருளை உவர்த்தல். உயிர்க்கினியார் காலன்கை புக்க ஞான்று புலம்பிப் பேதுற்ற துயர் நோக்கி அவர்பால் உவர்ப்புறுதல். இணை விழைச்சானின் பங்காண்பான் தன் காத லியின் குற்றமுணர்ந்து அவளை வெறுத்தல். கிட்டாக்காலை ஒரு நாளுணவை ஒழிக்கவும் ஒப்பாது, கிட்டியகாலை இரு நாளைக்கு ஏற்கவும் ஒப்பாது. எத்துணை உழைத்து ஊட்டினும்

நிரம்புமாறு இல்லாது குறைவுறும் நீர்மை கண்டும், பருத்த தொந்தி நம்மதென்று நாமிருக்க நரியும் எரியும், பேயும், பறவையும் தம்மதென்று தாமிருக்கும் என்று ஆன்றோர் உரைத்தலை யுணர்ந்தும் வெறுத்தல்

இன்னோரன்ன திறங்களான் உண்மைப்பொருள் நாட்டங் கொளற்கு உள்ளவுறுதி தருவ இடும்பை களாதல் எண்ணுக.

ச. வேண்டுதல் வேண்டாமையிலான்

விழைவு பற்றை விளைத்தலால் கட்டுண்ணச் செய்யும். எனவே விழைவின்மை இறைவன் இயல்பாகவே பற்றின் நீங்கியிருக்கும் பரிசு காட்டும். வெறுப்பு சார்பின்மையை விளக்கும் எனவே வேண்டாமை யிலாத்தன்மை இறைவன் யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்றல் காட்டும். இறைவனின் இப்பண்புகளை,

"வேண்டாமை வேண்டுவது மில்லான் றன்னை"

என்றருளிச் செய்வர் தாண்டக வேந்தரும்.

உயிர் தான் சார்ந்த தன் வண்ணமாந் தன்மையதாகலின் 'அடிசேர்ந்தார்க்கும் அவ்விரண்டு மிலவாயின என்றார் பரிமேலழகர். இறைவன் எண்குணனுதல் பற்றி அவனையுற்ற வுயிரும் அவ்வண்ண மாதலை "எண் குணத்துளோமே" என்றார் நாவரசர் என்க. இதனால் அடிசேர்ந்தாரும் அப்பெற்றிகளைப்பெற்று 'ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்" ஆவர் என்க. இது குறித்தே,

"வையினும் வாழ்த்தினு மலர்கொ டேத்தினும்
வெய்யவ ராவிடை வீழ நூக்கினு
மெய்யினு மெறியினு மியாது செய்யினு
நைவொடு மகிழ்வில ஞானி சீலமே"

என்றார் ஆன்றோருமென்க, இச்செய்யுளால் அடிசேர்ந்தார் யாண்டும் இடும்பையுருமையும் அறிக.

# முல்லைப் பாட்டு

திரு K சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

உள்ளறையில் உறங்கச் சென்ற அரசன் போரினை வாகையுடன் முடிக்கும் ஆர்வத்து சிந்தனையால் கண்ணுறக்கங் கொள்ளாது போரினிலே பட்ட துன்பங்களை நீடு நினைந்து பெரிதும் இரங்கினன். பகைவரது வேல் பாய்ந்தமையால் புண்கூர்ந்து தம் பிடிகளையும் மறத்த ஆண் யானைகளை உள்ளினன்; பகைவர்கள் தம் யானைகளின் துதிக்கைகளைப் பாம்பு பதைப்பது போன்று பதைக்கும்படி வெட்டி வீழ்த்தி வெற்றியுண்டாக்கித் தம் செஞ்சோற்றுக்கடனைத் தப்பாமற் கழித்து இறந்த தன் சிறந்த வீரர்களையும் எண்ணினன். பகைவர் அம்புகள் தம்மீது அழுந்தினமையால் செவி சாய்த்துக்கொண்டு உண்ணாது வேதனைப்படுகின்ற குதிரைகளைப் பற்றியும் சிந்தித்தனன், இவற்றை யாவும் அரசன் நெடிது நினைந்து ஒரு கை படுக்கையிலும் மற்றொரு கை தலையிலுமாக அமைய சாய்ந்த வண்ணம் வருந்துகின்றான். இவ்வாறாக இரவு கழிய மறு நாளில் வீறு கொண்டெழுந்து வெற்றிமுரசு முழங்க போரில் அரசன் வெற்றி கண்டான். கவலை யாவும் நீங்க. வெற்றி மகிழ்ச்சியாலும் மறு நாளே. தன் தலைவியைக் காணப்பெறும் மகிழ்ச்சியாலும் இன்துயில் கொண்டான்.

தன் தலைவன் தன்னை ஆற்றியிருக்குமாறு அறிவுறுத்தியதை நினைந்து, ஆறியிருத்தலே நலந்தரு முறையாகுமெனத் தெளிந்து தன்னையே தேற்றிக் கொண்டுள்ள தலைவி, பிரிவுத் துயரால் மெலிவு கொண்டிருத்தல் பற்றிக் கழலுகின்ற வளையைக் கழலவொட்டாமற் செறித்தனள்: ஆற்றியிருக்க வேண்டுமென்ற உணர்விலும் பிரிவுத்துயர் தலை காட்டுதலால், நிறையெனும் தன்மை தளர்தற்குக் காரணமாய தனிமையொடு கூடிய அறிவு மயக்கால்' மையலுற்று பெரு மூச்செறிந்து அம்பு தைத்த மயில் போன்று நடுக்கமுற்றாள் அதனுன் செறித்த அணிகலன்களை நெகிழப் பெற்றாள். எனினும் தான் பள்ளிகொண்டிருக்கும் மாளிகையின் கூடல் வாயிலில். கார் காலத்து மழைநீர் விழும் இனிய பலவாகிய ஓசை செவி நிறைய ஒலிக்க, தன் காதலன் விரைவு வரவையே எண்ண மிட்டுக் கொண்டு எதிர் நோக்கி யிருந்தாள்.

''வினைவயின் பிரிந்தோன் மீண்டு வருகாலை
இடைச் சுர மருங்கில் தவிர்தல் இல்லை''

என்பது தொல்காப்பிய மாதலின், போர்க்களத்தே வென்றி கொண்ட வேந்தன், வினை விளங்க வெல் கொடியுடன், கொம்பும் சங்கும் ஒலிக்க, தானே தன் தலைவியைச்சேர விரைந்து வந்த போது நப்பூதனார் வழியெங்கும் வளம்படைத்து செழிப்பு பல் வகையில் மிகும் இன்பக் காட்சியின் எழில் நலத்தை உள்ளு ணர்வால், கார் காலத்து வரவோடு காணவைத்தார். இவ்வாறு ஆசிரியர் காணவைத்து இன்பம் சேர்த்தது, தலைவனது காத லன்பையும் இன்ப வுணர்வின் வேட்கையும் தலைவியால் மிகு வித்தற் பொருட்டென்க. நெருங்கிய இலையுடைய காயாஞ்செடி கள், மைபோல் மலர்ந்து மிளிர்ந்தன. தளிரையும் பூங்கொத்துக் கிளையுங்கொண்ட கொன்றை மரங்கள், பொன் போன்ற மலர் களைச் சொரிந்தன. வெண் காந்தளின் முகைகள், அகங்கை போல விரிந்து மலர்ந்தன. இதழ் நிறைந்த தோன்றிப்பூக்கள் குருதி போல பூத்துக் குலுங்கின. இங்ஙனம் முல்லைக்காடு தழைத்துச் சிவந்த நிலத்துப் பெருவழியிலே மழையால் பொலிவு வாய்ந்த வரகங் கொல்லையில் கலை மானுடன் பிணைமான் காத லுள்ளத்தோடு துள்ளித்திரிந்தன. போரினில் வெற்றிகொண்ட தலைவன் இத்தகைய அழகின்பப் பெற்றியைக்கண்டதும், தன் தலைவியுடன் துய்க்க விரும்பும் இன்பத்தை நினைவிற் கொண்டு. தலைவியை விரைந்து சேரவிரும்பும் உளங்கனிந்தஉவகையினையும் பூரிப்பினையும் இயம்பவும் வேண்டுங்கொல்! வினைமேற்கொண்ட தலைவன் திரும்பிவரும் தேரினது குதிரையின் கனைப்பொலி கண வனை எதிர்பார்த்தவண்ணம் வருந்திக்கிடக்கும் தலைவியின் செவி யில், அவனது வினைத்திறம் விளங்குமாறும் ஒலித்தது என்ற அளவோடு இப்பாட்டினை நப்பூதனார் புறப்பொருள்களின் மெய்த்தெளிவில் அகத்தினிமை சுரந்து விளங்குமாறு முடித் துள்ள நயம், அவர்தம் புலமை கலையில் படர்ந்து வரும் நா நலனையும் இயற்கை வழியெழும் நடை நலனையும் எடுத்துக் காட்டா நிற்கும். இரு மனமும் ஈருயிரும் பூரித்து ஒன்ருகித் தம்மையே மறந்தும் முனைப்பற்று நிற்கும் காதலர்களது ஈறிலா தூய இன்பத்தைப் புலப்படுத்த தலைவனது தேரின் ஓசையும் குதிரையின் கனைப்பொலியும், தலைவியின் செவியில் ஆரவாரித்தன என நப்பூதனார் புகன்றதின் வன்மை மென்மையினைத் தேறுதல் வேண்டும். ஈண்டு அறிவு மனம் எழுச்சிகொள்ள ஒலி நயம எவ்வாறு துணை புரிகிறதென்பதை உன்னல் வேண்டும். மற்றும் தலைவனும் தலைவியும் ஒருவராகுமாறு விளங்கும் நிலையினை நப்பூதனார் சுட்டி யுணர்த்துதல் மூலம், கவிஞனும் கவிதையும் சேரும் நிலையை நம்மனோர்க்குத் தெற்றெனத் தெளியவும் வைத்தார்.

தலைவனது நெடுந்தேரினில் பூட்டப்பெற்ற விரைந்த செலவினையுடைய குதிரைகளின் குளம்பொலியும் கனைப்பொலியும் தலைவியின் ‘அஞ்செவி நிறைய வாலின’ என்ற அளவில் நப்பூதனார் கூறி முல்லைப்பாட்டினை முடித்ததில் தலைவியின் துயரத்தோடு கலந்து இதுகாறும் அவலமுற்றநாம் இறையருளால் தலைவன்பால் தலைவியடைந்த இன்பத்தில், குமிழிட்டு சுரக்கும் மகிழ்வினை கொள்ளுகிறோம். மற்றும் தலைவி தன் தலைவனின் பிரிவுத் துன்பத்தைத் தாங்கும் சீரிய ஒழுக்க வியல்புடையராய் இருந்ததினுற்றான், தலைவன் தன் வாழ்க்கை வளத்திற் குரிய போதிய புகழை ஈட்டுதற்கு இறையருள் வாய்ப்பு வாய்ந்து போரினிலே திறமை விளங்க பெற்ற வெற்றியைப்பெற்று தலைவிபால் மீண்டானென்ற அகத்தினிமை யுணர்வில் நினைக்கின்றோம். நாமடையும் இத்தகைய மகிழ்வும் அகத்தினிமையும் கவியின்பமாக மலரும். இக்கவியின்பம் இறையின்பமொக்கும். கருத்தொடு சிந்திக்கின் இக்கவியின்பம் இறைவனது அருளை உணரும் போதுதான் உண்டாக வல்லது. இதனை நன்குணர்ந்தே நப்பூதனார் முல்லைப் பாட்டிள்கண் தலைவியின் இறை நலங் கனிந்த காதல் கற்பின் புனிதத்துப் பூரணத்துவத்தை விளக்கியுள்ளது. கூர்ந்து அறிதறபாற்று. காதலன்பில் கட்டுண்டவர்களது அகத்தின் செம்மைத் தோற்றம் நம் முன்நிற்க. நாம் நப்பூதனாரையும் மறந்து. அவரது நெஞ்சச்சுடரின் வெளியீட்டில் மனவமைதியுற்று. நம்மை நாமே இழக்கின்றோம், இதுவன்றோ, நல்லிசைப் புலமைக் கலையின்பயனாய புலமைத்தொழில்! இப்புலமைக்கலையே, நுண்மாண் நுழை புலம் விழையும் ஒண்மையாளர்க்கு, உலகின்போக்கை நிறுவும் ஒளி விளக்கத்தைத் தருமென்பதில் ஐயமின்று. எனவே, இம் முல்லைப்பாட்டு வாழ்வின் நிலையாய உண்மையினை யுணர்த்தும் வாழ்க்கை யுருவமாகத்திகழ்கிறது.

நப்பூதனார் இயற்கையை உவமையாலும் தன்மை நவிற்சியாலும் சித்திர மெழுதிக் காட்டினாற்போன்று, கற்பார் மனத்திற் பதிய, வற்றாத உணர்ச்சியுடன் கூடிய வளமாய கற்பனை எழில் துளும்பவும் இசைத்துள்ளார். உள்ளனவற்றோடு மெய்ப்பாட்டுச் சுவையினை விளக்க, நப்பூதனார் சிறிது இல்லன புனைந்து முல்லைப்பாட்டின் மாட்சி நலனை உள்ளத்திற்குப் புலப்படுமாறு வகை செய்துள்ளார். ‘என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே’ என்பது புறம், கடல் பருகி நீரொழுக எழுந்து உலகத்தினை வளைக்கும் கார்மேகத்திற்கு, மாவலி வார்த்த நீரொழுக ஓங்கி வளர்ந்த கரிய திருமாலையும்

நனந்தலை உலகம் வளை இ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடு கொண்டெழுந்த கொடுஞ் செலவெழிலி
பெரும் பெயல் பொழிந்த சிறுபுன்மாலை

என உவமித்திருப்பதும், வில்லிலே அம்புருத்துணியைத் தொங்கவிட்டிருப்பதற்கு, துறவி தன் காவியுடையினை முக்கோலில் தொங்கவிடுதலும்

'கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நிற்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றி'

என உவமை கூறியதும், உறக்க மயக்கத்தால் அசைந்து செல்லும் மெய்க்காப்பாளருக்குக் காற்றுக்கு அசையும் தூறுகளையும்,

அதிரல் பூத்தவாடு கொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசை வந்தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்கலோங்கு நடைப்
பெருமூதாளர்

வேழத்தின் வெட்டிய கை பதைத்தற்கு, வெட்டுண்ட பாம்பு பதைத்தலும்

பாம்பு பதைப்பன்ன பரூஉக்கை துமிய

என உவமையாகச் சுவைபட உரைக்கும் இயல்பு நப்பூதனாரின் புலமைக் காழ்ப்பேறிய நிலையினைப் புலப்படுத்தா நிற்கும்.

நாவீறு கொண்டு கவிபாடும் வன்மையுடைய நப்பூதனார் சொற்களைச் சுருங்கச் சொல்லல் நவின்றோர்க்கினிமை, ஆழமுடைத்தாதல் என்றது போன்ற சிறப்புகள் விளங்கப் பொருளொடு பொருத்திக் காட்டுவர். அதனுன் பாட்டின் சொல்லோட்டம் ஆற்றின் நீத்தம் போல மெல்லிய உணர்ச்சியலைகளை எழுப்பும் பொலிவுடையது. அவரது சொல்லாட்சியில் அழகு விளங்

கும்; உணர்ச்சி துள்ளும்: பொருணலம் சிறக்கும். பொதுவாக நப்பூதனரது சொற்கள் நுண்மையும் எண்மையுங் கொண்டு யாப்புக்குக் கட்டுப்பட்டு நின்று, மெய்மையும் அறமும் நுவலும். இப்பாட்டில் தக்க சொற்கள் தனிப்பட்ட மதிப்பு வாய்ந்து உரிய இடந்தில் ஆற்றலுடன் குழைவாக அமைந்துள்ளதால். யாதாமொரு சொல்லை நீக்கின், நப்பூதனரது நற்றமிழின் இனிமை அழிந்து பொருள் சிறவாமை உணரப்படும். எனவே. உள்ளங் கவரும் முறையில், பொருட் செறிவுடைய செஞ்சொற் களை. நப்பூதனர் எடுத்தாண்டு, தம் நுட்பமாய கருத்துக்களை உணர்ச்சிப் பெருக்கத்துடன் பொருள் விளங்க வைத்துள்ளார். 'நெடுநாவொண்மணி நிழற்றிய நடு நாள்' எனும் அடியில் (50) நிழற்றிய என்பது நிழலைக் கொண்ட என்ற பொருளதாகி இலக்கண வகையால், ஒலியடங்கிய எனும் பொருளைத் தந்துள் ளது 'நிழற்றல்நுணுக்கமும் நிழல் செயலுமாகுமென்பது நல்லிசைச் சான்றோர் கூற்று. தொல்காப்பியத்தின்கண். 'ஓய் தல், ஆய்தல், நிழத்தல், சாஅய், ஆவயினான்கும் நுணுக்கப் பொருள்' எனக் குறிப்பிட்டுள்ளதினுன், இவ்வடி 'நெடுநா வொண்மணி நிழத்திய நடுநாள்' என்று இருக்க யிடந்தருமோ வென்பது தமிழறிஞர் ஆய்தற்குரியது. இச்சொல்லின் பொது மைக் கருத்தியல்பை இடம் நோக்கி அறிதல் இன்றியமையாதது. நிழத்திய என்பது பாட்டின் ஏனைய சொற்களோடு உறவு பூண்டு மனத்தில் படும்போது அதுநயம் அமைந்து, பொருள் செழிக்க நிறைந்து, ஒலி நுட்பத்தையும் ஓசையின்பத்தையும் சுவை நலத்தையும் ஊட்டவல்லதென்பது அறியற்பாற்று. மற் றும் இப்பாட்டின் சொற்களில் தேங்கியிருக்கும் மெய்ப்பாடு. உணர்ச்சி. அனுபவம் முதலியவற்றைப் பாட்டின்பொருளொடும். கவியின் உள்ளத்தோடும் உணரவே, சொற்களின் மாட்சித் திறன். கற்போரின் உள்ளப் பயிற்சியைப் பொறுத்து அமையு மென்பதும் நோக்கற்பாலது.

மயர்வறமதிநலமுற்ற நப்பூதனர் இம்முல்லைப்பாட்டினில், தலைவன் தலைவிபாலும் உணர்வும் அறிவும் இயைந்ததோர் நுட்ப நிலையினைத் தீட்டியும்., இயற்கை அனைத்தையும் உற வாகக் கொள்ளும் தமிழுள்ளத்தையும் வாழ்க்கைப் பொருளோடு அமைத்துக் காட்டியுள்ளார். இத்தகைய அற்புதத் தனிச்சிறப்பு கொண்டு. இப்பாட்டு செம்மாந்து இனிமையாகச் செல்லும் தூய தமிழிலக்கிய நடைபெற்று இயங்குவது: வாழ்வு நெறி யினைப் புகட்டி, உயர்ந்த நாகரீகப் பண்பாட்டினை வலியுறுத்தி நல்லுணர்ச்சி யூட்டுவது: கற்பாருள்ளம் உவகைகொள்ள

கருத்திற்கு நல்விருந்து அளிப்பது: நோக்கு முதலிய செய்யுள் உறுப்பினைக் கொண்டு சொற்சுவை பொருட் சுவை நிரம்பியது: அம்மை முதலிய காமுறும் அழகுகளையுமுடையது: காட்சிப் பொருளையும் கருத்துப் பொருளையும் நயமுற உவமக்கவினுடன் விளக்குவது; இலக்கண எழிலோடு, ஓசை ஒலியாலமைந்த இயற்றமிழ் மணங்கொண்டு திகழ்வது: நல் வாழ்வுக்குப் பயன் படும் இசை மென்மையும் நுண்மையும் வாய்ந்து, ழகர, லகர ஓசை மல்கி இனிமை பயப்பது: தமிழ் மொழியின் தீஞ்சுவை யமிழ்தம், மனத்திண்மை, புகழ்நோக்கு, பெருமிதம், வாழ்க்கை நுட்பம், இல்வாழ்வின் பண்பு, இயற்கை எழில நலம் முதலிய வற்றை விளக்கும் கலங்கரை விளக்கம். இப்பாட்டின் எழில் நலம், சொல்வன்மையிலும், பொருள் நிலை கூறும் முறைமை யிலும் அடங்கி கவி மாண்பினை உணாத்தும் இதனுன் இப் பாட்டு முல்லைத் திணை நெறிகளை ஐயந்திரிபற உணர்த்தவல்ல சொல்லாற்றலை மிக்குடையது சொல்லாற்றல் வழி புறத்தறி வோடு அகத்தினிமையை ஒருங்கே பயக்கும் இப்பாட்டு உயிர்க் களையினையும் இயலழகினையும் இயல்பாகவே வாய்ந்துள்ளது.

உணவிற்கு அளவோடு உப்பிடுதல் போன்று, இன்பக் கிளர்ச்சி குன்றுவாறு, இம்முல்லைப் பாட்டில், கருப்பொருள்கள் வழி காதலை வளர்த்து, அகப்பகுதிக் கருத்தைச்சுருக்கவுரைத்து, புறத்தினியல்பை, முறைமையோடு விதந்து விரித்துக்கூறி அப் புறத்தியல்பின் சிறப்பியலையும் கருத்தழகினையும் காணச்செய்து நப்பூதனர் நம் உள்ளத்தை ஈர்க்கும் அளவில் உணர்ச்சி மிக கிளந்துள்ளார், தலைவியின் துயரத்தில் நம்மை அழுந்தச் செய்த நப்பூதனர், அதனுன் நாம வருத்தம் முறுதவாறு பாடி வீட்டைப் பற்றி விரிவாகக் கூறி நம் மனத்திற்கும் ஆறுதலளித் துள்ளார். கார் காலத்தியற்கையும்; தலைவனைப் பிரிந்த தலை வியினியல்பும்; பெருமுது பெண்டிர், முல்லைக்குத் தெய்வமாய மாயோன்தான் தலைவியின் துயரைப் போக்க வேண்டுமென்ற துணிபுடையராய், மாயோன் கோயிலுக்குச் சென்று, நெல்லை யும் முல்லையும் தூவி, மாயோனை வணங்கி, விரிச்சி கேட்டுத் தலைவியை ஆற்றுவிப்பதும்: ஆய்மகள் குளிரால் தோளின்மேல் கைகட்டியவாறு, பாலுண்ணது வருத்தமிகும் கன்றுகளை நோக்கி ஆறுதல் மொழியினைக் கூறுவதும்; ஏழடுக்கு மாளிகையில் தலைவி கலுழ்வதும்; பாசறை அமைந்த வகையும்; பாசறையில் நிகழ் வனவற்றையும், போரினிலே நேர்வனவற்றையும், தலைவனது வீரத்தினேவோடு கூடிய துணிவுப் பெருந் தன்மையும், கழலும் அணிகலன்களைத் தலைவி செறிப்பதும், கூடல் வாயிலில் சொரி

யும் நீரோசையினைக் கேட்ட வண்ணம் தலைவி படுத்துக்கிடப்பதும். வெற்றிக்கொடியை ஏந்தியவண்ணம் குதிரைகள் பூட்டிய தேரினில், முல்லை நிலக்கருப் பொருள்கள் வளஞ்சான்ற பெற்றிமையால் விளங்கும் காட்டு வழியிலே, வயிரும் வளையும் ஆர்ப்ப, தலைவன் பேரார்வமுடன் தலைவி பால் வருதலும் ஆகியவற்றைச் சிறு சிறு புகைப் படங்களாகப் பிடித்து நப்பூதனார் காட்டிய திறம் வியந்து மகிழ்தற்குரிய அருமைப் பாடுடைத்து, முருகுணர்ச்சியை நல்கும் நப்பூதனாரது முல்லைப் பாட்டு, இவ்வாற்றான் நறுபாட்டாயிற்றென்க.

முல்லைப் பாட்டின்கண், தமிழ வாழ்க்கையின் இரு கூறுகளாயுள்ள காதலையும் வீரத்தையும் விளக்கி, உலகியலையும் வாழ்க்கைப் பயனையும் நப்பூதனார் உணரச் செய்து நம்பால் கரந்து கிடக்கும் கவிதைப் பண்பினையும். உணர்ச்சிகளின் திரட்சித் தத்துவத்தோடு வளர்த்து விடுகிறார்: மன நிறைவு பெற, தமிழ்ச் சொற்கள் ஒன்றோடொன்று காதலுறவு பூண்டு கலந்து வாழும் காட்சியின் வழி கவியின்பத்தையும் பெருக்கி விடுகிறார்: பின்னர் அதனை வாழ்க்கை யுண்மைகளுடன் அழகாக இணைத்து விடுகிறார்: இயற்கைப் பொருள்களின் இன்ப அமைதியினைக் கலைக்காது அதனுடன் பழகு நெறியுடன் கலந்து கொள்ளும் வாய்ப்பினையும் பாங்குடன் வற்புறுத்தியுள்ளார். இம்முறையில். அழகின்பங்களை, நப்பூதனார் தாமும் களித்து நம்மையும் மகிழ்விக்கும் போதும். மெய்ப் பொருளை உணர்த்தி உள்ளத்தைத் திருத்தும் பண்பினையும் நமக்கு அளித்து விடுகிறார். வாழ்விலிருந்து மலர்ந்த இப்பாட்டினில், நப்பூதனார் வாழ்வின் உண்மைத் தத்துவத்தை, அறிவுநிலை கொண்டு உணர்வு நிலையை யெழுப்பும் வகையாலே, விளங்கப் புலப்படுத்தி, இப்பாட்டு எங்ஙனம் வாழ்விற்கு உரியதாய் அமைந்து வாழ்விற்காக நிலைபெற்றுள்ள தென்பதைத் தக்க முறையில் உணரும்படி தெளிவாக்குகிறார். இப்பாட்டுடன் கலந்து பாட்டின் பொருளில் ஈடுபடுங்கால், இயற்கை இயக்கமாக ஒழுங்குற குழப்பமின்றி நடைபெறும் வாழ்க்கை, உண்மையும் அழகுங் கொண்டு, முழுத்தன்மை யடைவ தென்பது உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து விடுகிறது.

# மொழி வரலாறு

பேராசிரியர் வ. பெருமாள், எம். ஏ.. பி. டி எம். ஆர் ஏ. எசு.
தமிழ்ப் பேராசிரியர் முதல்நிலைக் கல்லூரி உரிகம்,
கோலார் தங்கவயல்.

மொழியின் வரையறை:

"மொழி" என்னும் சொல்லுக்குப் பல்வேறு அறிஞர்கள் பலவாறு விளக்கம் தந்துள்ளனர். ஒருவன் தன்கருத்தைப் பிறர்க்கு அறிவிக்கப் பயன்படும் ஒலியே மொழி எனப்படும். (Language is the vehicle of thought.) இவ் வரையறையை மொழியியல் அறிஞர்கள் எல்லோரும் பொதுவாக ஒப்புக் கொண்டுள்ளனர். தஞ்சையிலுள்ள அரிசி, வண்டியில் ஏற்றிச் சென்னைக்கு அனுப்பப்படுகிறது. தஞ்சையிலிருந்து சென்னைக்கு வண்டி வருகிறது. அவ்வண்டியில் அரிசி மூட்டையும் இருக்கிறது. எனவே. அரிசியும் தஞ்சையிலிருந்து சென்னைக்கு வருகிறது. ஆனால் அரிசி வேறு, வண்டிவேறு. இது எல்லோர்க்கும் தெரிந்த உண்மை. அது போலவே ஒருவனிடமுள்ள கருத்தை இன்னொருவனிடம் எடுத்துச் செல்லும் வாகனமே மொழி. எனவே மொழி வேறு கருத்து வேறு.

மொழியியல்:

மொழியின் ஒவ்வொரு கூறுபாட்டையும் விருப்பு வெறுப்பின்றி நுண்மாண் நுழை புலத்துடன் அறிவியல் அடிப்படையில் ஆய்வதே மொழியியல். அறிவின் துணையால் உண்மையைக் காண்பதே அறிவியலின் நோக்கம். இவ்விழுமிய நோக்கம் மொழியியல் துறையிலும் சிறந்து விளங்குதல் வேண்டும். ஒலி (Sound) ஒலியியல் (Phonetics) செவிப்புல ஒலியியல் (acoustic phonetics) ஒலியயியல் (phonemics) ஒலி உறுப்பு (organs of articulation) மொழித் தோற்றம், மொழி வளர்ச்சி, ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்தின் மொழியின் நிலை, மொழி மாற்றம், எழுத்து, எழுத்துக் கூட்டம் (orthography) சொல், சொல் அமைப்பு (morphology), சொற்றொடர், சொற்றொடர் அமைப்பு (syntax) சொற் பொருள் (semantics), அடிச் சொல்லியல் (etymology) உலக வழக்கு (colloquialism) இழி வழக்கு (slang), வட்டார வழக்கு (regional dialect) இலக்கணம், மரபுச் சொல் (idioms), குழந்தை

மொழி (children's vocabulary) கலைச்சொற்கள் (technical terms), கிளை மொழி (dialect) இனமொழி (related language) அகராதிக்கலை (lexicography) ஆகியவற்றை அறிவு நெறியில் ஆராய்வதே மொழியியல்.

மொழிக்கு அடிப்படை :

ஒலியை எழுப்ப அது பேச்சாக மாறுகின்றது. பேச்சு இலக்கண வரம்பிற்குள் பொருள் அமைதியுடன் இருக்கும் போது மொழியாக விளங்குகின்றது. எனவே மொழிக்கு அடிப்படை பேச்சொலி என்பது சொல்லாமலே விளங்கும். மொழி என்னும் சொல் பேச்சு, எழுத்து ஆகிய இரண்டையும் பொதுவாகக் குறித்தாலும் சிறப்பாகப் பேச்சையே குறிக்கும். மொழியியல் அறிஞர்கள் மொழி என்னும் சொல்லைப் பேச்சு (பேச்சு மொழி) என்ற பொருளில் தான் வழங்குகின்றார்கள். எழுதுவதற்கு எழுதுகோல் கருவியாக இருப்பதைப்போலப் பேசுவதற்கு மூல கருவியாக இருப்பது நாக்கு. 'நா' என்னும் சொல் நாக்கைக் குறிப்பதுடன் ஆகுபெயராக அமைந்து சொல் பேச்சு, மொழி ஆகியவற்றைச் சிறப்பாகக் குறிப்பதுண்டு. நாவன்மை (சொல் வன்மை) நாவலர் (பேச்சாளர்) நாநயம் (சொல் நயம்) நாமகள் (மொழித் தெய்வம்) நாவடக்கம் (சொல்லடக்கம்) முதலிய சொற்களிலுள்ள 'நா' என்னும் ஓரெழுத்து ஒருமொழி நாக்கை மட்டும் குறிக்காமல் நாக்கிலிருந்து பிறக்கும் சொல், பேச்சு, மொழி ஆகியவற்றைச் சிறப்பாகக் குறிப்பது இவண் ஆழ்ந்து நோக்கத் தக்கது. (குறள் 641) சொல்லப்படுவது சொல், பேசப்படுவது பேச்சு; மொழியப்படுவது மொழி. சொல். பேசு, மொழி ஆகிய மூன்றும் அடிப்படையில் வினைச் சொற்களாகவே அமைந்திருக்கின்றன சொல்வதற்கும் பேசுவதற்கும் மொழிவதற்கும் அடிப்படைக் காரணமாகவும் மூலக் கருவியாகவும் இருப்பது நாக்கு. நீ ஒரே வகையான பேச்சு பேசுபவனா இருவகையாகப் பேசுபவனா என்னும் பொருளில் 'உனக்கு ஒரு நாக்கா இரண்டு நாக்கா' என்னும் பழமொழி வாயிலாகக் கேட்பதுண்டு. எனவே, தமிழில் 'நா' என்னும் சொல் மொழியைக் குறிப்பதைப் போல 'ஆங்கிலத்திலும் 'டங்' என்னும் சொல் (tongue) மொழியைக் குறிக்கின்றது. (mother tongue - தாய்மொழி) 'லாங்வேஜ்' (language) என்னும் ஆங்கிலச்சொல் மொழியைக் குறிக்கும் அச்சொல் லிங்குவா (lingua) என்பதிலிருந்து தோன்றிற்று. 'லிங்குவா' என்னும் சொல் நாக்கைக் குறிக்கும். (lingua franca - பொதுமொழி) நிலத்திலிருந்து பயிர்

விளைவதைப்போல நாவிலிருந்து மொழி தோன்றுகின்றது. நிலம் இல்லா விட்டால் பயிர் இல்லை. அதைப்போல நாவில்லா விட்டால் மொழி இல்லை. ஒலி எழுப்புவதற்கும் பேசுவதற்கும் தலை, மிடறு (கண்டம்), நெஞ்சு, பல், இதழ் நாக்கு, மூக்கு, அண்ணம் முதலிய உறுப்புக்கள் பயன்படுகின்றன.

உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியும் காட்சி யான'

என்று தொல்காப்பியர் பேச்சு உறுப்புக்களைக் குறிப்பிடு கின்றார். ஆனால் அடிப்படையான பேச்சு உறுப்பு நாக்காகும். எனவே, மொழிக்கு அடிப்படை நாக்கே.

மொழியின் தோற்றம் :

உலகத்திலுள்ள மொத்த மொழிகள் ஏறக்குறைய 4000 என்று மொழியியல் அறிஞர்கள் கணக்கிட்டிருக்கின்றனர். எல்லா மொழிகளும் ஒரே காலத்தில் தோன்றியவையல்ல. நினைப் பிற்கெட்டாத நெடுங்காலத்திற்கு முன்பு தோன்றிய தமிழ் மொழியிலிருந்து மிக அண்மையில் தோன்றிய மொழிவரை வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு மொழிகள் தோன்றியுள்ளன. உலகத்திலுள்ள தொன்மையான மொழிகள் தோன்றிய காலத்தை அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியாது. மனிதன் தோன்றி நெடுங்காலத்திற்குப் பிறகே மொழி தோன்றியிருத்தல் வேண்டும் என்பது சொல் லாமலே விளங்கும் மொழித்தோற்றத்தைப் பற்றிப் பல்வேறு கோட்பாடுகள் உள்ளன மனிதன் முதன் முதலில் ஒவ்வொரு பொருளுக்கும் பெயரிடும்போது அதனோடு தொடர்புடைய ஒலி அடிப்படையில்தான் பெயரிட்டான். இம்முறைக்கு ஒலிக் குறிப்புக் கொள்கை (onomatopoeia) என்று பெயர். ஒரு வகைப் பறவை 'காகா' என்று ஒலி எழுப்பியதால் அதைக் 'காக்கா' என்று குறிப்பிட்டான். இன்னொரு பறவை 'குகூ' என்று கூவியதைக் கண்டான் ஆங்கிலேயன். அதனைக் 'குகூ'

(cuckoo) என்று குறிப்பிட்டான். (cuckoo—குயில்) 'கிண்கிண்' என்று ஒலிக்கின்ற கருவிக்குக் 'கிண்கிணி' என்று பெயரிட்டான். ஒலிக்குறிப்புக் கோட்பாட்டைக் குழந்தை மொழியில் நாம் இன்றும் காணலாம் குழந்தைகள் பூனையை 'மியா மியா' என்றும், நாதசுரத்தைப் 'பீ பீ' என்றும், மேளத்தை 'டும் டும்' என்றும் குறிப்பிடுவதைக் காணலாம் இதைப்போலவே மனிதனும் தன் மொழி வளர்ச்சியின் தொடக்க நிலையில் ஒலிக் குறிப்பைக் கொண்டே ஒவ்வொரு பொருளுக்கும் பெயர் வைத்தான். என்பதைத் தெளிவாக அறியலாம். இவ்வாறு மொழி தோன்றிற்று.

**தாய் மொழி :**

இயற்கை வழங்கிய சிறந்த செல்வங்களைத் தாயாகவும் பெண்ணாகவும் உருவகித்துக் கூறுவது பொதுமரபு நில மடந்தை, நிலமகள், நாமகள், பூமகள், தாய்நாடு முதலியவை இங்கு நோக்கத்தக்கன. பெண்மைக்கும் தாய்மைக்கும் பொதுவாக ஏற்றமளிப்பது மனிதப் பண்பு. எனவே தான் தமிழைத் தந்தை மொழி என்று குறிப்பிடாமல் தாய்மொழி என்று சொல்லுகிறோம். குழந்தை பிறந்தவுடன் முதன் முதலில் தாயைத்தான் பார்க்கின்றது குழந்தைக்குப் பாலூட்டும் போதும் சோறூட்டும் போதும் மொழியையும் சேர்த்து ஊட்டுகின்றவள் தாயே. குழந்தையைத் தொட்டிலில் இட்டு உறங்க வைக்கத் தாய்தான் தாலாட்டுப் பாடுகின்றாளே தவிர தந்தை பாடுவதில்லை. குழந்தை முதன்முதலில் கற்கின்ற சொல் 'அம்மா'. தந்தை பேச்சைவிட தாய் பேச்சில் இனிமை மிகுதி, மென்மை அதிகம். சுருங்கக் கூறுமிடத்துக் குழந்தைக்கு முதன் முதலில் மொழியைக் கற்றுக் கொடுப்பவள் தாய். எனவே தான், மொழியைத் தாய்மொழி என்று கூறுகிறோம்

"பொருப்பிலே பிறந்து தென்னவன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேனை
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்

(வில்லி பாரதம் சிறப்புப் பாயிரம்)

என்னும் இனிய பாடலில் தமிழ்மொழி பெண்ணாக உருவகித்திருப்பதைக் காணலாம்.

மொழிப் பாகுபாடு :

விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் விலங்குகளைப் பல குடும்பங்களாகப் பிரிப்பதுண்டு. இவ்வாறு பிரிப்பதால் ஒரு குறிப்பிட்ட விலங்கு எந்த இனத்தைச் சேர்ந்தது என்று அறிய முடியும். ஒத்த அமைப்புள்ள விலங்குகளை எல்லாம் ஒரு குடும்பமாகக் கருதுவதுண்டு. எடுத்துக் காட்டாகப் பூனையும், புலியும் ஓரினத்தைச் சேர்ந்தவை. பல்லி, உடும்பு ஆகியவை ஓரினத்தைச் சேர்ந்தவை. இதைப்போலவே மொழியியல் அறிஞர்கள் உலகத்திலுள்ள மொழிகளை ஆராய்ந்து அவற்றின் இயல்புகளுக்கு ஏற்ப பல குடும்பங்களாகப் பிரித்துள்ளனர். இவை மொழிக் குடும்பங்கள் எனப் படும். முதல் மொழியைத் தாயாகவும் அதனின்று கிளைத்த மொழிகளைக் கிளை மொழிகளாகவும், தோற்றத்தில் வேறுபட்டு ஆனால் அடிப்படையில் ஒன்றுபட்ட மொழிகளை அதன் இன மொழிகளாகவும் கொள்வது மரபு இம் மூன்றும் சேர்ந்து ஒரு மொழிக் குடும்பமாகும். ஒரு மூல மொழியிலிருந்து சிறிது வேறுபட்டுத் தோன்றிய கிளைமொழி நாளடைவில் வேறுபாடு மிகுதியால் இன மொழியாக மாறுவதும் உண்டு எடுத்துக்காட்டாகத் தமிழ் மொழியிலிருந்து கிளைத்துக் கிளைமொழியாக இருந்த மலையாளம் இன்று இன மொழியாகக் காட்சியளிக்கின்றது. இனமொழியாக இருப்பினும், மலையாளத்திற்கும் மூல மொழியாகிய தமிழுக்குமுள்ள அடிப்படை உறவு (குடும்ப ஒற்றுமை) குறையவில்லை. மொழிப்பாகுபாட்டு அடிப்படையில் தமிழ், தெலுங்கு கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. திராவிட மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்தவர் டாக்டர் கால்டுவெல் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது

மாற்றம் :

ஒருமொழி தோன்றிய போது இருந்தது போல் எப்போதும் இருப்பதில்லை. ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் மொழி மாற்றம் அடைகின்றது இத்தகைய மாற்றம் மொழி வளர்ச்சிக்கு அறிகுறியாகும். உயிருள்ள ஒவ்வொரு பொருளும் மாற்றம் அடைவது இயல்பே. ஒலி எழுத்து, சொல், சொற்பொருள் ஆகியவற்றில் ஒரு மொழி காலப் போக்கில் மாற்றம் அடைவது இயல்பே. இவற்றில் மூன்று வகையில் மாற்றம் ஏற்படும். அவையாவன புதிதாகத் தோன்றுதல், உள்ளது மறைதல், நிலை மாறுதல். எடுத்

துக்காட்டாக 'f' என்ற ஒலி ஆங்கில மொழிப்பயிர்ச்சியால் தமிழரிடையே பேச்சு வழக்கில் புதிதாகத் தோன்றியுள்ளது ஐ. ஷ, ஹ. ஸ, க்ஷ. முதலிய எழுத்துக்கள் அயல் மொழியின் கூட்டுறவால் தமிழில் நுழைந்தன. வடமொழி. ஆங்கிலம் பிரஞ்சு, போர்ச்சுகீசு, உருது, இந்தி முதலிய மொழிகளின் கூட்டுறவால் தமிழ் மொழியில் பிற மொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்தன. தமிழிலுள்ள பழஞ்சொற்கள் மிகுதியாகக் கலந்தன. தமிழிலுள்ள பழஞ்சொற்கள் மிகுதியாகக் கலந்தன, தமிழிலுள்ள பழஞ் சொற்கள் எத்தனையோ மறைந்து விட்டன மறைந்து கொண்டே வருகின்றன. இவ்வாறு சொற்கள் வழக்கு இழந்து மறைவதற்குப் பலகாரணங்கள் இருந்தாலும் அவற்றுள் அடிப்படையான காரணம் ஒன்று உண்டு ஒரு பொருளைக் குறிக்கப் பலசொற்கள் இருந்தால் காலப் போக்கில் அவை ஒவ்வொன்றாக மறைந்து இறுதியில் இரண்டொரு சொற்கள்தான் நிலைத்து நிற்கும் எடுத்துக்காட்டாக, அத்தி, பௌவம். அளக்கர்' ஆர்கலி, ஆழி, பெருநீர், அம்பரம்,முந்நீர், உப்பு, வீரை, சக்கரம் சாகரம், வேலை, வெள்ளம், மகராலயம் நேமி, சலநிதி. வாரி. சலதி அலை, பாராவாரம் உத்தி. சமுத்திரம், பரவை, உவர். நரலை. புணரி, வாரிதி. வேலாவலயம் கார்கோள், ஓதம். வாருணம், சிந்து, வாரம், அம்புராசி. உவரி முதலிய சொற்கள் கடலைக்குறிக்கும், ஆனால் இப்போது கடல், சமுத்திரம், ஆகிய இரு சொற்களைத் தவிர ஏனைய யாவும் வழக்கு இழந்து விட்டன இவ்வாறு ஒரு புறம் பேச்சு வழக்கிலும் எழுத்திலும் சொற்கள் பல மறைந்துகொண்டிருக்க காலத்திற்கேற்ப விண்வெளிக் கப்பல், நீர்மூழ்கி, அஞ்சல் நிலையம், தொலைபேசி, தந்தி, புகைவண்டி முதலிய புதுச்சொற்கள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. மொழி வரலாற்றில் சொற்பொருளைப் பொறுத்த வரையில் உயர்ந்த பொருளைக் குறித்த சொல் இழிந்த பொருளையும், இழிந்த பொருளைக் குறித்த சொல் உயர்ந்த பொருளையும் குறிக்கக் காண்கின்றோம். 'நாற்றம் என்னும் சொல் முன்பு நறுமணத்தைக் குறித்தது இப்போது தீய துர்நாற்றத்தைக் குறிக்கின்றது. கழகம் என்னும் சொல் பண்டைக்காலத்தில் சூதாடுகின்ற இடத்தைக் குறித்தது. இப்போது மன்றம், பேரவை. சங்கம் முதலிய நல்ல பொருளில் வழங்குகின்றது. பல பொருளைக் குறிக்க சொல் நாளடைவில் ஒரே பொருளையும். ஒரே பொருளைக் குறித்த சொல் பல பொருளையும் குறிப்பதையும் மொழி வரலாற்றில் மிகத் தெளிவாகக் காணலாம் தொல்காப்பியர் காலத்திற்கும் (கி. மு 5-ஆம் நூற்றாண்டு) பவணந்தி முனிவர் காலத்திற்கும் (கி பி.

12-ஆம் நூற்றுண்டு) இடையேயுள்ள 17-நூற்றுண்டுகளில் தமிழ் எவ்வளவு மாற்றம் அடைந்துள்ளது என்பதைத் தொல் காப்பியத்தையும் நன்னூலையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் நன்கு தெளிவாகும். நன்னூலார் காலத்துத் தமிழுக்கும் இருபதாம் நூற்றுண்டுத் தமிழுக்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு இத்தகைய மாற்றம் தமிழில் மட்டுமன்று உலகிலுள்ள ஒவ் வொரு மொழியிலும் ஏற்படுவது இயல்பே. கால வெள்ளத் தால் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டாலும் தொல்காப்பியர் காலம் முதல் பாரதிதாசன் காலம் வரை தமிழிலுள்ள உயி ரோட்டம் தொடர்ந்து ஒழுங்காக ஆற்றெழுங்கைப் போல நடைபோட்டுக் கொண்டு வந்திருக்கின்றது. அதே உயி ரோட்டம் தமிழ் மொழியில் தொடர்ந்து விளங்கும் என்பது ஒருதலை.

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக் கினுமோர்
எல்லையறு பரம் பொருள் முன் இருந்தபடி இருப் பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாள முந்துளுவும்
உன்னுதரத் துதிந்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த் துதுமே"

(மனேன்மணீயம்)

என்று தமிழ் மொழியின் சீரிளமையை வியந்து வாழ்த்து கின்றூர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. வாழ்க, தமிழ் மொழி! வளர்க தமிழ் மொழி!

# அறமும் ஆற்றலும்

திரு. த. பொ. தண்டபாணி,
ஓய்வு பெற்ற ஆசிரியர், பாண்டிச்சேரி.

அறத்தின் பொருள்.

மனிதப் பிறவியில் நாம் நல்ல செயல்களையே அளவற்ற எண்ணிக்கையில் விரைந்து செய்தல் வேண்டும். நல்லன வற்றை நன்றாய் ஆராய்ந்து அவற்றை விடாது பற்றிச் செய்தல் வேண்டும். பிறப்பும் இறப்பும் நம்மை மாறி மாறி ஏந்திக் கொள்கின்றன. அதற்குக் காரணம் நாம் செய்யும் வினையேதான் என்க. நமது நல் வினைக்கீடாகவே நமது நற் செயல்கள் சிறக்கின்றன. வினையின் இரு பெரும் பகுப்புக் களான (1) நல்வினை. (2) தீவினை ஆயவற்றின் விளைவே நமது தேகம் என்றால் அதில் ஒன்றும் மிகையில்லை செயல் கள் எவ்வாறாயினும் அவற்றை நாம் மனத்தினால் தீண்டாது நிற்றலே உயர்ந்த நிலையாகும். "வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை" என்ற முதுமொழிக்கிணங்க நமது வினைவழி நிகழும் செயல்களின் மூல காரணத்தை நன்கு ஆராயும் போது நமது இச்சையின் நிறைவுக்கும் அதன்தோற்றம், இருப்பு, முடிவு ஆயவற்றிற்கும் உற்றதொரு பெருவாய்ப்பளித்து வரும் "இறை யாணை"யை மறைக்காமல் கூறுவதே தலை சிறந்த தென்க. அதாவது நாம் செய்யும் செயல்கள் யாவும் இறை யருளால் நிறைவேறினதாகக் கருதிக் கூறவேண்டும். நமது மனத்தில எவ்விதத் தடங்கலும் மேற்கூறிய உண்மையை ஒத்துக்கொள்வதில் எழுதல் கூடாது. தடங்கல் என்றாலும் மாசு என்றாலும் பொருள் ஒன்றே

சுக துக்கங்களுக்கு அப்பால் நமது மனம் நம்மை வைக்க வேண்டும். இன்ப துன்பங்களுக்கெல்லாம் நாமே அதிகாரி யல்ல என்ற எண்ணம் வளர வேண்டும். அதுவே அறமும் ஆகும்.

இவ்வொப்புயர்வற்ற கருத்தினையே திருவள்ளுவர் "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்"—என்கிறார் இவ்விதம் மனத்தளவில், இன்னுங்கூறின் கொள்கை அளவில் அறம் இன்னது என்று தெளிதலைவிட, வேடத்தாலும், தாங் கற்கரிய போலி ஆசாரத்தாலும், தீய சிந்தைகளை மறைப்ப தற்காகவும் செய்யப்படும் செயல்களை எல்லாம் "அறம்"

என்ற தலைப்பின் கீழ்க் கூறுவதற்கில்லை. "குற்றமுள்ள நெஞ்சம் குறுங்குறும் என்றிருக்கும்" அல்லவா? எனவே அறத்தினை விவரிக்கும் போது தூய பரிசுத்த ஆண்டவனின அருள் வழங்கலை முன்னிலைப் படுத்திக்கொள்வதே அறமெனவும் அதற்குப் புறம்பாகக் கூறப்படுவன யாவும் குறைபாடுடையதே எனவும் கூற நேரிடுகிறது.

இப்போது

"மனத்துக்கண் மாசிலன்ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்ற திருவள்ளுவர் தரும் குறளின் சீரிய பொருளை இணைத்துக் கருது வோமாக. பண்டைக்காலத்தில் இக் குறள் வழி வாழ்ந்த பெரியோரான வசிட்ட முனிபுங்கவரும், இப்போது நமது மத்தியில் திருவருணையில் வந்து உறைந்து மறைந்தருளிய இரமண அடிகளாரும் கூறுவதையும் கேட்டு ஒப்பிடுவோமாக: வசிட்டர் இராமனுக்குக் கூறியது வடமொழியினின்றும் இரமண அடிகளார் மொழி பெயர்த்தருளினார்கள்

"போலிமன எழுச்சி மகிழ் வுற்றோ னாகிப்
போலி மனப் பதைப்பு வெறுப்புற்றோனாகிப்
போலி முயல்வாந் தொடக்க முற்றோ னாகி
புரையிலனா யுலகில் விளையாடு வீரா
மாலெனும் பல் கட்டுவிடு பட்டோ னாகி
மன னுசம னாகி யெல்லா நிலைமைக் கண்ணும்
வேலைகள்வே டத்தியைவ வெளியிற் செய்து
வேண்டியவா றுலகில்விளை யாடு வீரா

இரமணர் அருள் வாக்கு

பூ பரந் தாங்க இறை போலியுயிர் தாங்கல் அது
கோபுரம் தாங்கி யுருக் கோ ரணிகாண் — மாபரங்கொள்
வண்டி செலுவான் சுமையை வண்டிவையாது தலை
கொண்டு நலி கொண்ட தெவர் கோது,

இறை யருளாலேயே இவ்வனைத்துலகும் ஆக்கவும் அளிக்கவும் அழிக்கவும் படுகின்ற தென்ற முடிவுக்கு வந்து வாழ்ந்த பெரியார்களின் எண்ணிக்கையோ பல உதாரணமாக 1 காரைக்கால் அம்மையார், 2. பட்டினத்தடிகள், 3 தாயுமானவர் முதலியவர்களைக் கூறலாம்.

| | | | |
|---|---|---|---|
| (கடவுள்) | ஆட்ட | (மக்கள்) | ஆடுவர்: |
| ,, | அடக்கின் | ,, | அடங்குவர்; |
| ,, | பாட்டுவித்தால் | ,, | பாடுவர், |
| ,, | பணிவித்தால் | ,, | பணிவர் |
| ,, | ஓட்டுவித்தால் | ,, | ஓடுவர் |
| ,, | உருகுவித்தால் | ,, | உருகுவர் |
| ,; | காட்டுவித்தால் | ,, | காண்பர் |
| ,, | காட்டாக்கால் | ,, | காணூர்கள் என்ற |

இம் முடிவினுக்கு எல்லாம் வல்ல நாவினுக் கருங்கலந் தந்தருளிய நம் அப்பர் நயந்துளர். உலகெங்கும் பரவிக் கிடக்கும் மாபெருஞ் செஞ்சொற் புலவர்கள் யாவரும் அம் முடிவினையே ஓம்புகின்றனர். அத்தகைய அறத்தினை எய்தல் எளிதென்றுங் கூறுகிறுர் வள்ளுவர்.

மனத்துக்கண் மாசுபடியும் விதந் தெரிந்து கொண்டால் அதனை ஒருவாறு தடுக்கவும் வழியறியலாம். நம்மை ஏவல் படுத்துங் கருவி கரணுதிகளுள் இரண்டே சிறந்தவை 1. உள்ளம. 2. இச்சை. உள்ளம் சொல்கின்றபடியே ஓர் மைந்தன் மாம்பழம் வாங்கக் கடைத்தெருவு நோக்கிப் புறப்பட்டான் என்று வைத்துக் கொள்வோம். போகும் வழியிலே தீஞ் சுவை தோய்ந்த பலாக்கனிகள் அவன் கண்ணுககுப் பட்டன. அவற்றை வாங்கி உண்ணலாம் என்று அவனது இச்சை அவனை நோக்கிப் புடைக்கின்றது. மாம்பழம் வாங்கிப்போக வந்தவன் இச்சை வசப்பட்டுப் பலாக்கனிகளையே வாங்கி உண்கின்றுன். இதன் சாரத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

உள்ளம் ஓர் பெருங்கூடம் அங்கே ஊக்கம் உலாவுகிறது. ஊக்கத்தையும் உள்ளத்தையும் தொடர்புகொளச் செய்வது அன்பு. எனவே அன்போடு கூடிய ஊக்கம உள்ளமெனுங் கூடத்தில் உறுதியாக நின்று உலாவுகிறது. அதனை அசைக்க முடியவில்லை. எனினும் ஏகதேசமாக இச்சை என்கின்ற பாசத்தையும் உடன் படுத்தின் சுய நலம் தோன்றி அவ்வுறுதித் தட்டுளுப்புப் பட்டழிகிறது. அப்போது உள்ளத்தால் விடப்பட்ட ஏவல்கள் யாவும் இச்சையால் விழுங்கப்படுகின்றன. இதனை வரலாற்ருேடு சேர்த்து அறிவோமாக.

பலாக்கனிகளைக் கண்டது தற்செயலாக. ஆனல் வாங்க உறுதிகொண்டு சென்றது மாம்பழங்களையே தற்செயலாகக் கண்ட பலாக்கனிகள் எழுப்பிய இச்சையின் சத்தியானது

உறுதியோடு மாம்பழம் வாங்கி மீள வந்த உறுதியைத் தூள் தூளாக்கியது உள்ளத்தை வஞ்சிக்க இச்சை ஆரம்பிக்கிறது. ஏமாந்து போகிறோம்.

அவ்வாறே தான் இறையாணையை ஏற்று இறைவனை வழிப்பட்டு வீடு பேறெய்துவான் கருதி இக்குவலயத்திற்கண் வந்து பிறக்கின்றோம். இறைவன் நமக்குற்ற தாயும் தந்தையுமாக அப்போது ஆகின்றான. ஆனால் மண்ணில் வந்த பின்னர் நிகழ்வதைக் கவனித்தால், நாம் இறையாணையை வஞ்சித் தொழுகும் பெருமேதாக்கள் என்றே சொல்லவேண்டி வருகிறது மண், பெண், பொன் ஆய முத்திறத்த பலாக் கனிகளை உள்ளூற விரும்பி அவற்றோடு தேங்கித் திளைத்து இன்புறறிருந்து காலங்கழித்து முடிவு வந்ததும் இறக்கின்றோம். என்னே நம் போக்கு!

எனவே மனத்தின்கண் மாசு எப்படி வருகிறது என்று மீண்டும் விசாரிப்போம். ஆனால் கவர்ச்சியினாலும் ஆசையினாலுந்தான் என்றே சொல்லவேண்டி யிருக்கின்றது. இன்னுங் கூறின் இறையாணையை வஞ்சித்து நாம் காணும் பொருளின் மீது வைக்கும் நமது பேராய ஆசையினால்தான் என்றுங் கூறலாம். அதனையே வள்ளுவர் 'அஞ்சுவதோரும்'' என வரும் குறளில் ''வாசிப்பதோரும் அவா'' என்ற சொற்றொடர்களில் நன்கு எடுத்துக் காட்டுகிறார். எனவே நமது ஆசை, பேராசை, இச்சை, அவா என்றெல்லாம் கூறப்படுகின்ற பாசந்தான் மாசாக்குகிறது. நமதுள்ளம் மாசு படுகிறது ''ஆசையின்றேல் பூசையில்லை'' என்றாகி விடவுங்கூடாது.

மனத்தின்கண் நிகழக்கூடிய தூய செயல்தான் மாசின்மையாகும். அந்நிலை அருவநிலை, காணற்காகாது. உணர்வுக்கே உரியது உள்ளத்தூய்மை உடையோர்களது செயல்கள் எல்லாம் நன்மையின் பாற் பட்டே இருக்கும் என்க. உதாரணமாக ஒருவன் ''கொடையாளி வள்ளல'' என்று பெயர் பெற்றான் என்போம். அவனிடத்துச்சென்ற ஏழைகளை அவன் பார்க்கும் போது புலால் உண்ணும் விலங்குகளான பூனை, புலி, சிங்கம், நரி, கரடி, முதலியன தத்தம் இறைச்சியை உயிருடன் காணும் பொழுது கொள்ளும் முகப்பொலிவு போல் அமைத்துக் கொள்வானேல அவனை என்னென்பது?

அதனால் தான் அவன் கொடுக்கும் பொருளைப்பற்றி அறம் கூறப்பட வில்லை. அவன் காட்டும் முகப்பொலிவும், பரிவும் உபசரிப்பும் இனிய சொற்களுமே அவன் செய்யும் தருமத்தின் புறச் செயல்கள் என்க. காலணா ஒருவருக்குக் கொடுப்பது

பெரிதல்ல, வறியவர்க்கு அவரவர் வாட்டங்கண்டு. நல்ல முகங் காட்டி அவர்களை அன்போடு வரவேற்று இனிய மொழிகளைப் பேசிப் பின்னர் கொடுக்கும் பொருள் மிகமிக அற்பமேனும் ஞாலத்தின் மாணப் பெரிதாக்கொள்ளப்படும். அதனையே திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

"முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானும்
இன்சொலி னதே அறம்"

இவ்வாறு தருமத்தை விளக்க வந்தபோது அதன்' அகப் பொருத்தத்தை நன்கு விளக்க வேண்டியதவசியம் யாது? ஒருவர் தருமி மற்றொருவர் வறியர். ஒருவர் இடுவோர். மற்றொருவர் ஏற்போர். ஏற்போரின் குறிப்பறிதல் இடுவோரின் நல்ல பண்பினை எடுத்தியம்பும். மேலும் ஏற்க வந்துள்ள ஏழைகளின் உள்ளத்தே வறுமை வெறுமை ஆகிய தீயபண்புகளின் தாக்குதல்கள் அலைமோதிக் கொண்டிருக்கும். இடுவோர்கள் இல்லை என்று கூறிவிட்டால் எங்கே போவது என்ற ஏக்கம் ஒருபக்கம் அவர்களை வாட்டிக் கொண்டே யிருக்கும். அவ்வாட்டம் அவர்களைப் பொல்லாங்கு செய்வித்தாலும் செய்விக்கும். இன்றைய உலகில் எத்தனையோ அல் வழிப்பட்ட செயல்களை வறியவர்கள் அவர்களுக்குள்ளும் முக்கியமாக பிச்சை எடுப்பவர்கள் செய்வதை நாம் கண்டு திடுக்குறுகின்றோம். அதற்குக் காரணம் இடுவோர்களிடத்துள்ள கடுகடுப்பும், சுடுசுடுப்பும் வெறுப்புற்ற வேதனைதரு மொழிகளுமே என்க. எனவே ஏற்போர்களை இனிது நோக்கி, முகங்குளிரக் கண்டு உட்கார வைத்து அவர்களோடு இனிய மொழிகளைச் சிறிது நேரம் அளாவுவோமாயின் அவர்கள் உள்ளத்தே ஊறிவந்த தீய எண்ணங்கள் சிறிது சிறிதாக அகலும். அத்தீய எண்ணங்கள் காலி செய்த அவர்கள் உள்ளத்தில் இடுவோர்களின் நல்ல பண்புகள் சென்று அமர்ந்து தருமத்தின் பெருஞ் சத்திகளைப் பற்றி நினைக்க வைக்கும் அத்தகைய உறவில் ஏற்போரும் இடுவோரும் நுகரும் இன்பம், அநுபவம், மறுமலர்ச்சி ஆய பல நல்ல பண்புகள் போற்றற் குரியனவாய் வீறிட்டெழுந்து உலகெங்கும் உலாப்போகும். எனவே ஏதேனும் ஒன்றை வறியார்க்குத் தூலமாக ஈவதன்முன் ஈவோர்களின் இனிய சொற்கள் நன்கு ஆராய்ந்து நவிலப்படுமேல் அவைகள் ஏற்போர்களின் பிறழ்ச்சிக்கும் புரட்சிக்கும் வித்திடும் தீய எண்ணங்களை அகற்றும் என்பதில் ஐயமில்லை என்று நவில்கிறார் நம் செந்நாப் புலவர் அதாவது.—

'அல்லவைதேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்" என்பதே.

(தொடரும்)